முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 262/2022

அரசுதரப்பு 1 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இளங்கோவன் | வயது | : | 57 |
| தந்தை/கணவர் பெயர் | : | கோடி சுந்தரம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 16.06.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது கருவேப்பலங்குறிச்சி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். நான் ஆலடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்த போது கடந்த 24.02.2019ந் தேதி காலை 05.30 மணிக்கு ஆலடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் G.ராஜேந்திரன் அவர்களுடன் நானும் என்னுடன் காவலர் 1059 திரு.வெங்கடகிருஷ்ணன் ஆகியோர் சகிதம் குற்றம், கலகம் மற்றும் மணல் கடத்தல் தடுப்பு சம்மந்தமாக கண்காணித்து சென்ற போது, நடியப்பட்டு டாஸ்மாக் அருகில் நடியப்பட்டு மார்க்கம் இருந்து புதுப்பேட்டை நோக்கி வந்த பெயர் விலாசம் இல்லாத இரட்டை மாட்டு டயர் வண்டியை நிறுத்தி சோதனை செய்ய மேற்படி மாட்டு வண்டியில் சுமார் 1/2 யூனிட் அளவிற்கு ஆற்று மணல் இருந்தது.

அதன் ஓட்டுநரை விசாரிக்க தன் பெயர் தமிழரசன், S/O பழனி, ரேஷன்கடை தெரு, களத்தூர் கிராமம், சேந்தமங்கலம்), உளுந்தூர்பேட்டை தாலுக்கா விழுப்புரம் என்றும், மேற்படி ஆற்று மணலை விழுப்புரம் மாவட்டம் கெடிலம் ஆற்றிலிருந்து ஏற்றி வருவதாகவும் கூறினார். மேற்படி ஆற்று மணலை நிலத்தில் இருந்து எடுப்பதால், நிலத்தடி நீர் ஆதாரம் பாதித்து மக்கள் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் பாதிப்பு ஏற்படும் என்று தெரிந்தும், சுயலாபம் கருதி விற்பனை செய்ய ஏற்றி வந்ததாகவும், மேற்படி ஆற்று மணலை ஏற்றிவர எந்தவித அரசு அனுமதியோ, உரிமமோ எதுவும் வைத்திருக்கவில்லை என்றும், திருட்டுதனமாக ஏற்றி செல்வதாக கூறியதால் காலை 07.00 மணிக்கு காரணம் கூறி உதவி ஆய்வாளர் கைது செய்வதார். அந்த நேரத்தில் அந்த இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன் வராததால், தடயங்களை எங்கள் முன்னிலையில் போலீஸ் மகஜரில் 07.15 மணிக்கு கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆகும். தற்போது என்னிடம் புகைப்படத்தில் காட்டப்படும் வண்டி தான் கைப்பற்றப்பட்ட வண்டி ஆகும். அது சா.பொ.1 ஆகும். வழக்கு சொத்து எண் 62/2019. பின்பு மேற்படி எதிரிகள் மற்றும் தடயம் சகிதம் காவல் நிலைய குற்ற எண் 36/2019 பிரிவுகள் 379, 430, IPC r/w 21(1) MM ACT– ன் படி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல்நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டு சென்றோம் என்று குறிப்பிட்டு வாக்குமூலத்தில் சொல்வில்லை என்றால் சரியல்ல. அதிகாலை 5.30 என்று சொல்லியுள்ளேன். வாகனத்தினை கைப்பற்றிய இடம் டாஸ்மாக் உள்ள இடம், மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் மணல் ஏற்றியதற்கான உபகரணங்கள் காட்டப்படவில்லை என்றால் சரிதான். அது போல் டயர் மாட்டு வண்டி என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்., எங்கிருந்து மணல் அள்ளிவரப்பட்டது என்று விசாரித்து அந்த இடத்திற்கு சென்று வரைபடம், பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். வழககிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும் வண்டி எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. மேல் அதிகாரி போட்ட புள்ளி விவர கணக்கிற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 262/2022

அரசுதரப்பு 2 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடகிருஷ்ணன் | வயது | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 16.06.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது ஆலடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். நான் ஆலடி காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வந்த போது கடந்த 24.02.2019ந் தேதி காலை 05.30 மணிக்கு ஆலடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் G.ராஜேந்திரன் அவர்களுடன் நானும் என்னுடன் அ.சா.1 ஆகியோர் சகிதம் குற்றம், கலகம் மற்றும் மணல் கடத்தல் தடுப்பு சம்மந்தமாக கண்காணித்து சென்ற போது, நடியப்பட்டு டாஸ்மாக் அருகில் நடியப்பட்டு மார்க்கம் இருந்து புதுப்பேட்டை நோக்கி வந்த பெயர் விலாசம் இல்லாத இரட்டை மாட்டு டயர் வண்டியை நிறுத்தி சோதனை செய்ய மேற்படி மாட்டு வண்டியில் சுமார் 1/2 யூனிட் அளவிற்கு ஆற்று மணல் இருந்தது.

அதன் ஓட்டுநரை விசாரிக்க தன் பெயர் தமிழரசன், S/O பழனி, ரேஷன்கடை தெரு, களத்தூர் கிராமம், சேந்தமங்கலம்), உளுந்தூர்பேட்டை தாலுக்கா விழுப்புரம் என்றும், மேற்படி ஆற்று மணலை விழுப்புரம் மாவட்டம் கெடிலம் ஆற்றிலிருந்து ஏற்றி வருவதாகவும் கூறினார். மேற்படி ஆற்று மணலை நிலத்தில் இருந்து எடுப்பதால், நிலத்தடி நீர் ஆதாரம் பாதித்து மக்கள் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் பாதிப்பு ஏற்படும் என்று தெரிந்தும், சுயலாபம் கருதி விற்பனை செய்ய ஏற்றி வந்ததாகவும், மேற்படி ஆற்று மணலை ஏற்றிவர எந்தவித அரசு அனுமதியோ, உரிமமோ எதுவும் வைத்திருக்கவில்லை என்றும், திருட்டுதனமாக ஏற்றி செல்வதாக கூறியதால் காலை 07.00 மணிக்கு காரணம் கூறி உதவி ஆய்வாளர் கைது செய்வதார். அந்த நேரத்தில் அந்த இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன் வராததால், தடயங்களை எங்கள் முன்னிலையில் போலீஸ் மகஜரில் 07.15 மணிக்கு கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 ஆவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். தற்போது என்னிடம் புகைப்படத்தில் காட்டப்படும் வண்டி தான் கைப்பற்றப்பட்ட வண்டி ஆகும். வழக்கு சொத்து எண் 62/2019. பின்பு மேற்படி எதிரிகள் மற்றும் தடயம் சகிதம் காவல் நிலைய குற்ற எண் 36/2019 பிரிவுகள் 379, 430, IPC r/w 21(1) MM ACT– ன் படி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல்நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டு சென்றோம் என்று குறிப்பிட்டு வாக்குமூலத்தில் சொல்லில்லை என்றால் சரியல்ல. அதிகாலை 5.30 என்று சொல்லியுள்ளேன். வாகனத்தினை கைப்பற்றிய இடம் டாஸ்மாக் உள்ள இடம், மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் மணல் ஏற்றியதற்கான உபகரணங்கள் காட்டப்படவில்லை என்றால் சரிதான். அது போல் டயர் மாட்டு வண்டி என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்., எங்கிருந்து மணல் அள்ளிவரப்பட்டது என்று விசாரித்து அந்த இடத்திற்கு சென்று வரைபடம், பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். வழககிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும் வண்டி எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. மேல் அதிகாரி போட்ட புள்ளி விவர கணக்கிற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.